அருள்மிகு சொரிமுத்தையனார் கோவில் ஸ்தல வரலாறு

T. N. S. முருகதாஸ் தீர்த்தபதி
அரண்மனை,
…ன் சிங்கம்பட்டி — 627416

விலை: ரூபாய் மூன்று

029:38.2197
N95
217633

அருள்மிகு சொரிமுத்தையனார் கோவில் ஸ்தல வரலாறு

T. N. S. முருகதாஸ் தீர்த்தபதி
ஜமீன் சிங்கம்பட்டி

முன்னுரை

திருநெல்வேலி கட்டபொம்மன் மாவட்டம் அம்பாசமுத்திரம் வட்டத்தை சார்ந்த பொதிகை மலையின் அடிவாரத்தில் தாமிரபரணியின் நதிக்கரையில் அமைந்திருக்கும் சிங்கம்பட்டி சமஸ்தானத்திற்குப் பாத்தியப்பட்ட அருள்மிகு சொரிமுத்தையனார் கோவிலில் குடி கொண்ட அருள்மிகு அய்யனார், ஐயப்பனின் மூலாதாரம் என்ற முதல் ஷேத்திரம், மேற்படி கோயிலின் முதல் இரண்டு ஸ்தல வரலாறு பதிப்புகளை மதிப்பிற்குரிய காலஞ்சென்ற திரு. தி. அரிகரசுப்ரமணிய பட்டர் அவர்களால் அச்சிடப்பட்டு வெளி வந்தது. அதில் காணப்படாத சில அபூர்வ விஷயங்களை இக்கோயிலின் பரம்பரை அறங்காவலரும், சிங்கம்பட்டி குறுநில மன்னருமான உயர்திரு டி.என்.எஸ். முருகதாஸ் தீர்த்தபதி மகாராஜா அவர்கள் பெரு முயற்சி எடுத்து ஆதாரங்கள் திரட்டி சிறப்பாக எழுதியிருக்கிறார்கள். மற்றும் கோயிலின் புகைப்படங்களும் கண்களை கவரும் வகையில் இடம் பெற்றுள்ளன. குறிப்பாக அருள்மிகு சொரிமுத்தையனாரின் பஞ்ச ரத்ன ஸ்தோத்திரமும், புதுக்கோட்டை திரு தியாகராஜன் எழுதிய கலியுக வரதன் ஸ்ரீ ஐயப்பன் என்ற புத்தகத்திலிருந்து எடுக்கப்பட்ட அருள்மிகு ஐயப்பன் மூலாதார நிலையும் இடம்பெற்றிருப்பது குறிப்பிடத்தக்கது. பக்த கோடிகள் அனைவரும் இந்நூலை படித்து இன்புற்று பயன் அடைய அருள்மிகு சொரிமுத்தையனாரை வேண்டுகிறோம்.

சாமியே சரணம் ஐயப்பா!

கோவில் நிர்வாகம்.



திருக் கோவிலின் முகப்புத் தோற்றம்

அருள்மிகு சொரிமுத்தையனார் கோவில் சிறப்பு வரலாறு

முன்னொரு காலத்தில் பார்வதி, பரமேஸ்வரர் திருக் கல்யாண காக்ஷி காண்பதற்கு தேவர்கள், முனிவர்கள் முதலானோர்கள் வடதிசை சேர அத்திசை தாழ்ந்து தென் திசை உயர்ந்த காரணத்தால் பரமேஸ்வரர் அகஸ்தியரை தென் திசை அனுப்பினார்.

அகஸ்தியர் தென்திசையில் பல தலங்களுக்கும் சென்று பொதிகை மலை போகும் முகமாக இப்பொழுது சொரி முத்தையனார் கோவில் இருக்கும் இத்தலத்தில் தங்கி தாம்பிரபரணி ஆற்றில் தனது ஸ்நான அனுஷ்டானம் முடித்து யோக நித்திரை கூடியிருக்கும் போது ஜோதி ஒன்று தோன்ற அதிசயித்து ஞான திருஷ்டியால் நோக்க லோகமாதாவாகிய பிரம்மராக்ஷஸி பேச்சி முதலிய எல்லா மூர்த்திகளுடனும் சாஸ்தாவானவர் திரு மகாலிங்கம் என்ற பெயர் தாங்கிய பரமேசுவரரை பூஜித்து தியானித்துக் கொண்டிருக்கும் காக்ஷி தென்படவே ஆனந்தித்து புளகாங் கிதம் அடைந்து ஆனந்த புஷ்பம் சொரிய தெரிசித்து பிரார்த்தித்து அதுசமயம் ஆடி அமாவாசையாக இருப்பது கொண்டு இந்த தினத்தில் விசேஷமாகவும், மற்றுமுள்ள தினங்களில் யாரொருவர் இவ்விடம் வந்து இந்த தீர்த்த கட்டத்தில் ஸ்நானம் செய்து புலால் மது, நீக்கி இவ்விடம் எழுந்தருளி இருக்கும் மூர்த்திகளை வழிபட்டு தெரிசிப்ப வர்களுக்கெல்லாம் எல்லா இன்னல்களையும் நெருப்புப் பட்ட பஞ்சு பொதி போல் நாசம் செய்து புத்திர பௌத்ராதி அஷ்ட ஐஸ்வர்யங்களுடன் வாழ வைக்க வேணுமென்று பகவானை பிரார்த்தித்து வணங்கி வரம் வாங்கி நிற்கும் சமயம் தேவர்கள் வான் முகட்டில் இருந்து மலர் மாரி பொழிய அன்று முதல் மலர் சொரிமுத்தையனார் என்று பெயர் தாங்கி, அருள்மிகு மகாலிங்கம், சங்கிலி பூதத்தார், காத்தவராயர், மேலவாசல் பூதம், மேலவாசல் விநாயகர், தெக்ஷிணாமூர்த்தி, கும்பமாமுனிப் பெரியசாமி, பாதாள பூதம், உக்ரகாளி, கரடிமாடன், பிரம்மராக்ஷஸி, பேச்சி,

ஜ்யோதிருத்ரன் என்ற சுடலைமாடன், கருப்பன், கருப்பி தளவாய்மாடன், தூண்டில் மாடன்,பட்டவராயர்,முதலான இன்னும் பல தெய்வங்களுடன் காட்சி கொடுத்து மறைந் தார்.

இதன்பின் கால தேவனின் கொடுமையினால் குருமுனி அகஸ்தியரின் ஞான திருஷ்டியில் தோன்றிய அருள்மிகு மகாலிங்கம்சுவாமி தர்மசாஸ்தாவாக காட்சி அளிக்கும் அருள்மிகு சொரிமுத்தையனார் மற்றும் பரிவார தேவதை கள் இருப்பிடம் துலங்காமல் போய்விட்டன.

நினைவிற்கு எட்டாத காலத் தொடக்கம், நாணயங்கள் செலவாணிக்கு பழக்கத்தில் வராத காலக்கட்டம், மக்கள் பண்ட மாற்றம் செய்து வாழ்ந்து வந்த காலம், பாண்டிய நாட்டிலிருந்து பொதி மாட்டின் மூலம் சுமை ஏற்றி, இன் றளவும் அகஸ்தியர் வாழும் பொதிகை சிகரத்தில் சேர நாட்டு வணிகர்களுடன் பண்டமாற்றம் மூலம் வணிகம் செய்து பலகாலம் வருங்காலையில் ஒரு சமயம் பொதி மாடு களின் அடிச்சுவடு இடையறாது ஒரு கல்லின் மேல் பட்ட தின் பேரில் வியக்கத்தக்க அளவில் அக்கல்லில் இருந்து உதிரம் கொட்டத் தொடங்கியது. இதன் காரணங்கொண்டு பயணம் தடைப்பட்டு நிற்க அனைத்து வணிகர்களும் விரைந்து ஓடி உதிரம் கொட்டும் கல்லை சூழ்ந்து அதிச யித்து நின்றார்கள். அவ்வேளை அனைவருடைய உடலி லும் மெய் சிலிர்க்க ஒரு அசரிரீ கேட்டது. அசரிரீ தெரி வித்த விளக்கமாவது; முற்காலத்தில் அகஸ்திய மாமுனி ஞான திருஷ்டியில் அறிந்து உணர்ந்த அருள்மிகு மகாலிங்க சுவாமி, அருள்மிகு சொரிமுத்தையனார், அருள் மிகு பிரம்மராட்க்ஷஸி மற்றும் பரிவார தேவதைகள் எழுந் தருளி இருப்பதாகவும் அதனை முன்னிட்டு இனி தொடக் கம் ஆகம விதிகளுக்கு உட்பட்டு பூஜா கைங்கரியங்கள் நடந்து வரவேண்டும் என்றும் மற்றும் ஆலய நிர்மாணங் களுக்கு உகந்த கட்டிடங்கள் எழுப்ப வேண்டுமென்றும் அருளி மறைந்தது. திருவருள் ஆணையை சிரமேற் கொண்டு சிவநேச செல்வர்களும் சேவார்த்திகளும் பக்த கோடிகளும் புரவலர்களும் இதுகாறும் சிரத்தையுடன் பல திருப்பணிகள் செய்து செப்பனிட்டு வருகிறார்கள். பல

பரிவார தேவதைகள் இருந்தாலும் முக்கியமாக இருபத்தி ஒரு ஸ்புடம் இக்கோவிலுக்கு பிரதானம் என கருதப்படு கிறது. விஷ ஜந்துக்களும், கொடிய வனவிலங்குகளும் வாழுகின்ற இந்த காட்டு மத்தியில் அமையப்பட்ட கோவிலில் சிறப்பாக சேவார்த்திகள் நினைவில் கொள்ள வேண்டிய அதிசயம் இன்றளவும் ஒரு சிறு விஷ ஜந்துகூட ஒரு சேவார்த்தியை தீண்டி அவதியுற்றதாக வரலாறு இல்லை.

ஏறத்தாழ இருநூற்றைம்பது ஆண்டுகளுக்கு முன்னால் சேர நாட்டில் பத்மநாதபுரத்தை தலைநகரமாகக் கொண்டு ஆண்டு வந்த மார்த்தாண்ட வர்ம மன்னன் இளமைப் பருவத்தின்போது உறவினர்களின் சூழ்ச்சியினால் அவரை அரசு பதவியில் இருந்து ஒழித்துக்கட்ட முயற்சித்த வரலாறு சேர நாட்டு சரித்திரத்தில் விரிவாக வரையப் பட்டுள்ளது. பகைவர்களுக்கு அஞ்சி தலைமறைவாக பல இடங்களில் வாழ்ந்து வந்ததில் குறிப்பாக இக்கோவிலி லும் மறைந்து வாழ்ந்ததாக இப்பகுதி காது வழிச் செய்தி நிலவுகிறது. மார்த்தாண்டவர்ம மகாராஜா இப்பகுதியில் உலவி வருங்காலை அப்போது வாழ்ந்திருந்த சிங்கம்பட்டி பாளையக்காரருடன் நட்புறவு பூண்டிருக்க வேண்டும். காரணம் மன்னருக்கும் அவருடைய எதிரிகளான எட்டு வீட்டு பிள்ளைமார்களுக்கும் போர் மூண்டபொழுது சேர நாட்டு அரசர் சிங்கம்பட்டி பாளையக்காரருடைய உத வியை நாடியிருக்கிறார். சிங்கம்பட்டி பாளையக்காரர் தன் வசம் உள்ள சிறந்த இரண்டு தளபதிகளின் கீழ் ஒரு குதிரைப்படையை போர் முனைக்கு அனுப்பியதுடன் யுத்த பயிற்சி பெறுவதற்கென தனது மூத்த புதல்வரான இளவர சரையும் அனுப்பி வைத்தார். போராட்டக்காரர்களின் கலவரத்தை பாளையப்பட்டு குதிரைப்படை வெற்றிகரமாக ஒடுக்கி புறமுதுகு காட்டி ஓடச் செய்து வாகை சூடிய போதிலும் விதிவசத்தால் போர் பயிற்சி பெறுவதற்கு சென்ற பாளையப்பட்டு இளவரசர் விஞ்சிய போரிட்டு வீர சொர்க் கம் எய்து விட்டார். வேல் வீச்சில் திறன் பெற்ற இளவரசர் வீர மரணம் அடைந்தது குறித்து சோகத்தில் ஆழ்ந்த சேர மன்னர் இறப்பின் பின் சிறப்பு என்ற அடிப்படையில் இளவரசருக்கு ''நல்லகுத்தி'' என்ற சிறப்பு பட்டத்தை

வழங்கியதோடு நில்லாமல் தாளாத துயரத்தில் மூழ்கிய சிங்கம்பட்டி பாளையக்காரருக்கு இரத்த தானமாக வழங்கும் வகையில் தங்களுக்கு வேண்டுவதை கேளுங்கள் என்று சொன்னபோது மட்டுக்கடங்காததை கேட்கக் கூடாது என நினைந்து தன் நிலைக்கு ஏற்றவாறு ''குச்சி ஒடிக்க காடு வேண்டுமென'' பாளையக்காரர் வேண்டியதாக வரலாறு உள்ளது. சேர மன்னர் பெருத்த உயிர்ச் சேதத்திற்கு வயப்பட்டுள்ள பாளையக்காரர் மனதிற்கு நிறைவு பெறும் அளவிற்கு அவருக்கு உரிய பகுதியில் 74 ஆயிரம் (74000 ஏக்கர்) ஏக்கர் பரப்புள்ள மேற்கு தொடர்ச்சி மலையின் ஒரு பகுதியை பாளையக்காரருக்கு வழங்கினார். இம்மலைச்சரிவு, ஆளுகை கை மாற்றம் பெற்றமையால் இத்திருக்கோவிலும் சிங்கம்பட்டி பாளைய நிர்வாகத்திற்கு உட்பட்டதாயிற்று. இதன் தொடக்கம் இப் பாளையப்பட்டின் வழித்தோன்றல்கள் இத்திருக்கோவிலின் தெய்வங்களை குல தெய்வமாக மனதில் வரித்து சீரும் சிறப்புமாக பேணி வருகிறார்கள்.

1994ம் வருடத்தின் மறு பதிப்பான இவ்வரலாறு வரை தொடர்ந்து பல அதிசயங்கள் நிகழ்ந்து வருவது குறிப்பிடத் தகுந்தது. விரிவு அஞ்சி பலவற்றையும் குறிப்பிடப்படவில்லையானாலும் இவ்வரலாற்றின் ஆசிரியரும் இத்திருக் கோவிலின் பரம்பரை அறங்காவலரும் ஆகிய நான் ஒரு சிலவற்றையாவது குறிப்பிடப்படவில்லையென்றால் எனது கடமையிலிருந்து முற்றிலும் தவறியவனாவேன். அவைகளை வரிசைப்படுத்தி கீழே தந்திருக்கிறேன்.

1. அருள்மிகு பூதத்தார்

1979-ம் ஆண்டு இந்து சமய அறநிலையப் பாதுகாப்புத்துறை தனி அலுவலர் இத்திருக்கோயிலை ஆய்வு செய்யும் பொருட்டு விஜயம் செய்தபோது வடக்கு கோயிலையும் தெற்கு கோயிலையும் பிரிக்கின்ற காட்டு ஓடையில் குறுக்கே அமைக்கப்பட்டிருந்த மரக் கட்டையினால் செய்யப்பட்டிருந்த பாலம் ஜீரனித்து பழுதடைந்து அபாயகரமான நிலையில் உள்ளதென ஆணையர் அவர்களுக்கு அறிக்கை சமர்ப்பித்துவிட்டார். இதனை மேவி ஆணையர்

அவர்கள் பழுதடைந்த நிலையில் உள்ள பாலத்தை சீர மைக்க திருக்கோவில் நிர்வாகம் ஏன் இதுவரை நடவடிக்கை எடுக்கவில்லை என்று கேட்டு எழுதியிருந்தார்கள். இது வரையிலும் எனது நிர்வாகத்தில் குறைகானாது பாராட்டு தலுக்குரியதாக இருந்த நிலைமாறி மாசு கற்பிக்க வேண் டியநிலை வந்துவிட்டதே என எனது ஆத்மார்த்த பூஜை யில் நான் கண்ணீர் சிந்தியபோது ஒருவார இடைவெளிக் குள் ஒரு பெரும் அதிசயம் நிகழ்ந்தது. கோயம்புத்தூரில் பிரபலமான தொழில் அதிபரின் துணைவியாரின் மேல் இரவில் அருள்மிகு பூதத்தார், ஆவேசித்து அவரது கணவரிடம் மறுநாள் காலையில் என்னை என் இருப்பிடம் வந்து தரிசித்துவிட்டு அதன்பின் என் ஊழியனான சிங்கம்பட்டி ராஜாவை சந்தித்து எனக்காக அவன் சொல் லும் வேலையை செய்து கொடுக்குமாறும் உத்திரவு இட்டதை மேவி மன்னரை சந்திக்கும் சாஸ்திர முறைப்படி என்னை சந்தித்து எனது வேண்டுகோளை ஏற்று கட்டப் பட்ட பாலமே இன்றளவும் காட்சி அளிக்கிறது.

2. அருள்மிகு தளவாய் மாடசாமி

1990-ம் ஆண்டு ஆரல்வாய்மொழி சேவார்த்திகளுக் கும் அம்பாசமுத்திரம் வட்டத்தைச் சார்ந்த ஒரு கிராமத்தின் சேவார்த்திகளுக்கும் தளவாய் கொட்டகையில் படப்பு போட்டதில் தகராறு வந்து, கை கலப்பு ஏற்பட்டதில் கோபாவேசத்தில் ஒருவர் காலால் படையலை எத்திவிட் டார். இச்சம்பவம் நிகழ்ந்த ஐந்து நிமிடங்களில் நல்ல உடல்கட்டும், தேக ஆரோக்கியத்துடனும் இருந்த அந்த நபர் மரணம் அடைந்துவிட்டார்.

3. அருள்மிகு பிரம்மரஷஷி

மகிசாசூர வர்த்தினியின் அவதாரம். இந்த அம்பாளு டைய உபாசகர்கள் சிலர் திருநெல்வேலி மாநகரத்தில் இருந்து வெள்ளி, செவ்வாய் கிழமைகளில் பொதுமக்க ளுக்கு அருள்வாக்கு அளித்து வருகிறார்கள். இதுபோன்று நெல்லை கட்டபொம்மன் மாவட்டம், சிதம்பரனார் மாவட்டம் மற்றும் கன்னியாகுமரி மாவட்டங்களை சேர்ந்த பல ஊர்களில் அம்பாளுக்கு நிலையம்விட்டு கொடுத்த

துடன் அருள் வாக்கும் சொல்லி வருகிறார்கள். காலஞ் சென்ற எனது மைத்துனர் முகவை மன்னர் இராமநாத சேதுபதி அவர்களுக்கு மணமாகி பல ஆண்டுகளாக குழந்தை பேறு இல்லாமையால் அம்பாளுடைய கடாட்சத் தால் குழந்தை 1967-ல் பிறந்தது. இக்குழந்தைக்கு புண்ணியாவாச காலத்தில் வயிற்றோட்டம் ஏற்பட்டு கவலைக்கிடமான நிலையில் இருந்தபோது காலஞ்சென்ற எனது சிறிய தாயாரான திருமதி கணேசகுஞ்சரி நாச்சியார் அவர்கள் ஓடிச் சென்று நேமிதத்திற்குரிய நாமத்தை பிரம நாயகி என்று சூட்டி பிர்ம ராஜேஸ்வரி என்று கூறி குங் குமத்தை நெற்றியில் இட்டதுமே அதிசயிக்கும் வகையில் வயிற்றோட்டம் நின்றுவிட்டது. இப்போது அக்குழந்தைக் கும் அம்பாளுடைய கடாட்சத்தால் குழந்தை பிறந்து பிர்ம அபர்னா என்று பெயர் வைத்திருப்பதுடன் அக்குழந்தை யினுடைய சித்தப்பா மனைவியும் அம்பாளுக்கு நேமிதம் செய்து மகப்பேறு அடைந்ததை இங்கு குறிப்பிடுவது அவசியமாகும்.

4. மேலே கண்ட பத்தியில் குறிப்பிடப்பட்டுள்ள எனது காலஞ் சென்ற சிறிய தாயாரான திருமதி கணேச குஞ்சரிநாச்சியார் மணமாகியபின் தொடர்ந்து மூன்று குறை பிரசவத்தை சந்தித்த காரணங்கொண்டு என்னுடைய தாயாரின் அறிவுரையின்பேரில் அம்பாளுக்கு நேமிதம் இருந்து மகப்பேற்றை அடைந்தார். அக்குழந்தைக்கு பிர்மரெகுராஜ் என்ற பெயரிட்டு தற்போது வெளிநாட்டு தொழில் நிறுவனம் ஒன்றில் நிர்வாக இயக்குநர் பதவி ஏற்று கர்நாடக மாநிலமான பெங்களூரில் வசித்து வரு கிறார். இவருக்குப் பின்னும் பிறந்த எட்டு குழந்தைகள் எல்லோருக்கும் அவர்களுடைய பெயர்களுக்கு முன்னால் பிர்ம என்று அம்பாளின் பெயர் சேர்த்தே வைத்துள்ளனர். இதோடல்லாமல் எனது சிறிய தாயார் குடும்பத்துடன் நட்பு கொண்டிருந்த பல திரை உலக நடிகர், நடிகைகள் நேமிதம் செய்து கொண்டபின் அம்பாளுடைய கடாட்சத் தினால் மகப்பேற்றை அடைந்து குழந்தைகளுக்கு அம்பா ளுடைய பெயர் சூட்டியிருப்பது இங்கு குறிப்பிடுவது அவசி யமாகும்.

ஆடி அமாவாசை பெருந் திருவிழாவில்
பக்தர்கள் பூக்குளி இறங்கும் காட்சி

5. அருள்மிகு பட்டவராயர்

ஏறத்தாழ பலநூறு ஆண்டுகளுக்கு முன்னால் மேல் உலக செயல்பாட்டிற்கு உட்பட்டு விதி வழி மதி என்ற வகையில் இப்பூவுலகத்தில் ஆதி சைவர் குலத்தில் பிறந்து, அருந்ததி வகுப்பைச் சார்ந்த பொம்மக்கா, திம்மக்கா என்ற இரு சகோதரிகளை முத்துப்பட்டன் மணக்க நேர்கிறது. மணம் புரிந்த குறுகிய கால அளவில் அந்த பக்கம் உள்ள ஊர்களில் உள்ள மாடுகளை கண்காணித்து மேய்த்து வந்த பெண் கொடுத்த மாமாவான வாலப் பகடை இயற்கை எய்துகிறார். இதன்பின் மாடுகளை மேய்த்து கண்காணிக் கின்ற பொறுப்பை நிர்பந்தமான சூழ்நிலையில் முத்துப் பட்டன் ஏற்க நேர்கிறது. அவ்வேளை சங்கரன்கோயில் பகுதியில் பஞ்சத்தால் பாதிக்கப்பட்ட 39 நபர்கள் ஏதேனும் கிடைக்குமா என்று இப்பகுதியில் அலையும் போது திருக் கோயில் அருகாமையில் மேய்கின்ற பசுக்குலங்கள் மேல் கண்ணோட்டம் விழுந்ததினால் அவைகளை ஒன்றுதிரட்டி ஊருக்கு கொண்டு போக எத்தனிக்கிறார்கள். இச்செயல் பாட்டை அறிந்த முத்துப்பட்டன் அவ்விடத்திற்கு விரைந்து சென்று அக்கொள்ளையர்களிடம் நயந்தும், அறிவுறுத்தி யும் சொன்னவைகளை கொள்ளையர்கள் மனதில் வாங் காமல் வந்த நோக்கத்தை நிறைவேற்ற முனைகிறார்கள். இனி தாமதிப்பதில் பயனில்லை என்ற நிலை வந்ததும் முத்துப்பட்டன் ஆயுதங்களுடன் கொள்ளையர்களுடன் பொருதி விட்டார். பல மணி நேரங்கள் துவந்த யுத்தத் திற்குப்பின் காய்ச்சல் மிகுதியால் நோய்வாய்ப்பட்டிருந்தும் முத்துப்பட்டன் சளையாது தீரத்துடன் போரிட்டதால் கொள்ளையர்களை மடக்கி வென்றதோடு மட்டுமல்லாது அவர்களை விண்ணுலகம் சேரச்செய்து விடுகிறார். அதன் பின் உதிரம் தோய்ந்த தன் ஆயுதங்களை தாமிரபரணி நதியில் கழுவிக் கொண்டிருந்த பொழுது காயம் அடைந்து குற்றுயிராகக் கிடந்த கள்ளன் ஒருவன் முத்துப்பட்டன் அறியாதவாறு பின்புறமாக இருந்து கீழே கிடந்த ஈட்டி ஒன்றை எடுத்து அமர்ந்திருந்த முத்துப்பட்டனை விலாப் புறமாக ஏந்தி குத்திவிடுகிறான். ஈட்டி வயிற்றிலுள்ள குடல் களை கிழித்து மறுபுறம் வெளிவந்தது. ஆகவே இரத்தப் பெருக்கினால் அவ்விடத்திலேயே சாய்ந்து முத்துப்பட்டன்

மரணத்தை தழுவிவிடுகிறார். முத்துப்பட்டனுடைய வீர தீர செயல்களை தழுவி இவருக்கு நிலையம் விட்டுக் கொடுத்து தெய்வமாக்கி பொதுமக்கள் பட்டவராயர் என அழைக்கத் தொடங்கினார்கள்.

இன்றளவும் அவர் சுற்றுப்புறம் உள்ள காடுகளில் தேவ சரீரத்துடன் அவர் வளர்த்த காச்சி நாய், பூச்சி நாய்க ளுடன் வேட்டையாடும் பொருட்டு உலவி வருவதை கடந்த 60 ஆண்டுகளாக பக்தி மிகுந்த சேவார்த்திகள் இரவு நேரங்களில் பார்த்ததாக என்னிடம் தெரிவித்து இருக் கிறார்கள். இதனை தழுவி அவர் ஆதிசைவர் குலத்தில் பிறந்து, பின் அதைத் துறந்து, அருந்ததி வகுப்பு பெண் களை மணந்து, அவ்வகுப்பைச் சார்ந்ததினால் அவருக்கு நேமிதம் செய்து காலணிகளை சேவார்த்திகள் சேர்ப்பிக் கிறார்கள். அக்காலணிகளை இதுகாறும் பயத்தினாலும், பக்தியின்லாலும் தொடுவதற்குக்கூட அஞ்சும் நிலையில் உள்ள அக்காலணிகளில் சகதிகள் சேர்ந்த மண்ணும், புல்லும் சிறு மிருகங்களின் உடற்கழிவுகள் காய்ந்த நிலை யில் ஒட்டிக் கொண்டிருப்பதுடன் அதிசயத்தக்க விதத்தில் அக்காலணிகள் காலப்போக்கில் தேய்மானத்திற்கு உள்படு வது என்பது நம் அறிவுக்கு எட்டாத, புலப்படாத புதிரா கவே இன்றளவும் அமைந்திருக்கிறது.

1992ம் ஆண்டு இரவு நேரத்தில் சில கள்ளர்கள் மண்டபத்திற்குள் புகுந்து உண்டியலை உடைத்து காணிக் கைகளை களவாட நினைத்து எத்தனித்த போது சுவரில் சாய்த்து வைக்கப்பட்டிருந்த பல வல்லயங்களில் ஒன்று மட்டும் கிடு கிடு என ஆடி, அதில் பொருந்திய மணிகள் கல கல என ஒலித்து கள்ளர்கள் மேல் பாய்ந்த நிலை யில் பெரிய சப்தத்துடன் விழுந்து விடுகிறது. இதன் நிமித்தம் அச்சம் மேலிட்டு கள்ளர்கள் ஓடிவிட்டனர். காணிக்கை களவு போகவில்லை. இது தொடர்பாக



சிங்கம்பட்டி கனம் மகாராஜா T. N. S. M.
தர்பாரில் அமர்ந்திருக்கும் காட்சி

கல்லிடைக்குறிச்சி காவல் நிலையத்தில் திருக்கோயில் நிர்வாகம் ஏற்றவாறு புகார் செய்ததில் வழக்கு எண் 152/92 பதிவாகி பொருள் ஆய்வில் இருப்பது குறிப்பிட்டுக் காட்ட வேண்டிய நிகழ்ச்சியில் ஒன்றாகும்.

என்றும் ஐயப்பன் சேவையில்,
வரலாற்று கட்டுரையின் கர்த்தா,

டி. என்,எஸ். முருகதாஸ் தீர்த்தபதி ராஜா,
குறுநில மன்னர் மற்றும் பரம்பரை அறங்காவலர்,
அருள்மிகு சொரிமுத்தையனார் வகையறா
திருக்கோயில்கள், அரண்மனை,
சிங்கம்பட்டி-627 416.

போக்குவரத்து வசதி

கோவிலுக்கு எல்லா காலங்களிலும் வருவதற்கு வசதியாக திருநெல்வேலி சந்திப்பில் இருந்தும் அம்பாசமுத்திரத்தில் இருந்தும் காரையார் செல்லும் பஸ்ஸில் சொரிமுத்தையனார் கோவில் விலக்கில் இறங்கி ஒரு பர்லாங் தூரம் நடந்து வந்து சேரவேணும். கோவில்வரை கார்கள் மற்றும் வேன்கள் வருவதற்கு பாதை வசதிகள் செய்யப்பட்டுள்ளது.

வேண்டுதல் செலுத்துபவர்கள்

கோவில்களில் வந்து சுவாமிக்கு நேமிதம் செலுத்த வரும் பக்தர்களின் வசதிக்காக எந்த காலமும் இரண்டு பூசாரிகளும், இரண்டு பலவேலைகளும் உள்ளனர். தினமும் மூன்று வேளை பூஜை நடப்பதும் குறிப்பிடத்தக்கது. மற்றும் காது குத்தல், முடி எடுக்கும் வகைக்கு வேண்டிய வசதிகள் செய்யப்பட்டுள்ளது. மற்றும் சமையல் பாத்திரங்களும் தங்கும் விடுதி வசதியும் உண்டு. மேலே கண்ட வசதி வேண்டுபவர்கள் திருக்கோயில் மணியம் அவர்களிடம் தொடர்பு கொண்டு வசதி பெற்றுக் கொள்ளலாம். எல்லோரும் பிரார்த்தனை செய்வதற்கு என்று பஞ்சரத்ன ஸ்தோத்திரம் என்ற பாடல் ஐந்து இத்துடன் இணைக்கப்பட்டுள்ளது. இந்தப்பாடல் இயற்றியவர் யாரெனத் தெரியவில்லை. சொரிமுத்தையனார்கோவில் மூலாதாரக்ஷேத்திர

மென்று வழங்கப்படுகிறது. அநேகர் இவ்விடம் வந்து மாலை அணிந்து சபரிமலை போகிறார்கள். பக்த கோடிகள் அருள்மிகு சொரிமுத்தையனார் பஞ்சரத்ன ஸ்தோத்திரம் படித்து பயன் பெறுவார்களாக.

அருள்மிகு சொரிமுத்தையனார் பஞ்சரத்ன ஸ்தோத்திரம்

1. மனமே நமக்காக வாய்த்த குலதேவரின் மகிமை தான், ஆதிசேஷன் வாக்கு முழுவதும் அடங்காத வண்மை தனையான் அற்ப மானிடன் உரைப்பதாமோ, தனது பொன்னம்பலத்திலெங்கும் சந்ரோதயன் தீரைலோக்ய, ஸம்மோஹனன், தரணியில் அன்னை, பரிபூரணன் பக்தி சந்தகமும், செய்திருப்போம். ஜனஜமுஹ மஹாமேரு, சிகாமனி தீரனே! தீவினைகள் மாற்றி மேலும் செல்வங் களாம், பக்தி, முக்தி கல்வி, ஸந்ததிகளும் தந்து சிந்தை தனில் வீற்றிருப்பாய், புனுகு, சவ்வாது, கஸ்தூரி, இவை யாதி பூசுமிருசு பூதகன நாதனென்றும், பொன்சொரியும் முத்துப் பொதிகைச் சாரலில் வீற்றிருக்கும் உத்ரஜன் புத்திர சந்தானபதியே.

2. தஞ்சமென வந்தவர்க்கு, தருணத்தில் முன் நின்று தற்காக்கின்ற கோமான் சவாரி வருகின்றதைப்பார், உலகில் அந்தணர் சதுர் வேத மாரி பொழிய வெஞ்சிலை பூதம் எதி ரேற்று கட்டியம் கூற, வேதாளம் குடை பிடிக்க பிறகினில் சுந்தரயக்ஷியும், முல்லைக்குமாரியும், வெண்சாமரங்கள் வீச, அஞ்சா தரண வெரியன் அடப்பம் எடுக்க, அசநி களாஞ்சியேந்த, அமராதியர் புஷ்பவர்ஷம் சொரிய, வெடி வினோதங்கள் அகில வாத்தியமும் முழங்க கொஞ்சும் கருணாசரன், ஜகன் மோஹனன் பொங்கும் பாக்கியங்கள் தருவார், பொன் சொரியும், முத்துப் பொதிகை சாரல் தனில் வீற்றிருக்கும் உத்ரஜன்ஸந்தானபதியே.

3. ஆதாரமான பொன்னம் பலவனும் பவனியாய்ச் சவாரி வருகின்றதைப்பார். ஆரிய பட்டரொடு ரணவீரன் உடைவாள் கொண்டு அகம் பிடி பிடித்து வரவும், பாதாள பூதம் எதிர்சூது சாவலன், படச்சங்கள் பெயர் பெற்ற நீல்கண்ட்ன் இருளன் அண்டையில் பலவேஷன் ஆட லதிபன், தவசி, வாதாடும் வன்னியன் தூதோடுவன்

சுடலை மாடனும் கூடிவருவார் மந்திரமூர்த்தித் தலைவரும் துயரகற்றி நம்மனதை விஷ்டந்தருவார். பூதாதிபன் துரிய வேத, சாஸ்த்ராகம புராணங்கள் ஓதும் பொருளாம் பொன் சொரியும் முத்துப் பொதிகைச் சாரவில் வீற்றிருக்கும் உத்ரஜன்புத்திர ஸந்தானபதியே.

4. எங்கும் நிறைந்த சிவன் அங்கம் புணர்ந்து, மால் ஈன்றெடுத்து ஆண்டபெருமாள். இக்கலியுகத்தில் கருணைக்கடல் இவருக்கு நிகர் இவ்குவலகத்திலேது துங்கரன சிங்கனென நீ கநக சக்கிலித் தோளன் இருளன் காளி தளவாய் துஷ்டரை விரட்டும் அடயோட்டி கட்டாரி முத்தோடுடைய பட்டராயன், துங்கள், சுருட்டி, முருகன் சரகு குட்டியும் சூழ்ந்து, இலங்கும், பக்தான் தரங்களென்றும், துன்பம் துடைத்து, அருள் இன்பம் கொடுத்து உபரி தொண்டரை ஆட்கொண்டிருப்பார். பொங்கு புகழ் பொன்னாட்டுச் சிங்க நகர் தென்னாட்டுப் புலி, ராஜகுல தேவனென்று பொன் சொரியும் முத்துப் பொதிகைச் சாரலில் வீற்றிருக்கும் உத்ரஜன் புத்திர ஸந்தான பதியே.

5, சீரணிகரந்தையர் சேரிணக்கம் செய்து செல்வம் கொடுத்ததும் இவரே செட்டி வேஷம் பூண்டு வந்து சில துஷ்டரை சிக்ஷைகள் செய்ததும் இவரே. தாரணியில் ஆரணன் காரணத்தால் வந்து தலைச்சுமடு எடுத்ததும் இவரே. தலை அமுத்தி ஆண்டவன் சிலை கொண்டடித்ததுடன் ஸ்தானம் கொடுத்ததும் இவரே. வாரணம் மீதேறி கோரங்கள் செய்ததில் மத்தகம் உடைத்ததும் இவரே. மனதிரக்கம் கொண்டு தனது செங்கையினால் மைந்தர் வரம் தருவதும் இவரே. பூரணானந்த ஜெயவீர மனிதாஸன் போற்றும் குலதெய்வம் இவரே. பொன் சொரியும் முத்துப் பொதிகைச் சாரலில் வீற்றிருக்கும் உத்ரஜன் புத்திரஸந்தான பதியே.

இந்த ஸ்தோத்திரத்தைப் படித்தவர்கள், கேட்டவர்கள் எல்லா நலன்களும் பெற்று இன்புற்று வாழ்வார்களாக.

பஞ்ச ரத்ன ஸ்தோத்திரம் முற்றிற்று.

Q29:38.21197.C
217633

க்ஷேத்திரங்களின் ஆதார நிலை

நிலை		சிவன்	முருகன்	சாஸ்தா
1.	மூலாதாரம்	திருவாரூர்	திருப்பரங் குன்றம்	சொரிமுத்தை ய
2.	சுவாதிஷ் டானம்	திருவா னைக்கா	திருச்செந்தூர்	அச்சங்கோ
3.	மணிபூரகம்	திருவண்ணா மலை	பழனி	ஆரியங்கா
4.	அனாகதம்	சிதம்பரம்	சுவாமிமலை	குளத்துப்புழை
5.	விசுத்தி	காளத்தி	குன்று தோராடல்	பந்தளம்
6.	ஆஞ்ஞை	காசி	பழமுதிர் சோலை	சபரிமலை
7.	பிரமரந்திரம்	கைலாசம்	கதிர்காமம்	காந்தமலை

இது புதுக்கோட்டை திரு தியாகராஜன் அவர்கள் எழு இருக்கும் கலியுக வரதன் ஸ்ரீ ஐயப்பன் என்ற புஸ்தகத்திலிருந் ஆதாரமாக எடுக்கப்பட்டது.

*

217633

6A
7-59